ருக்கிறர்களா என்று கேட்கிற நேரத்தில் உறுப்பினர் அவர்கள் எந்தப் பள்ளியையும் சென்று பார்க்கவில்லை என்று கருதுகிறேன். முதலில் உறுப்பினர் அவர்கள் காட்பாடிக்குப் போய் பார்த்த பிறகு எப்படி அது இயங்குகிறது என்று சொல்லலாம். நானும் வாய்ப்புகள் கிடைக்கும்போது அவைகளைப் பார்த்துக் கொண்டுதான் வருகிறேன்.

நன்னிலத்தில் மாணவியர்களுக்கு அரசு விடுதி

* 417 வினு—திரு. பி. ஜயராஜ்: மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் ஜில்லா, நன்னிலத்தில் சர்க்காரால் மாணவியர் விடுதி ஒன்று ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?

(இ) ஆம் என்றல், எப்போது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா: 1970-71-ல் புதிதாக துவக்கப்பட இருக்கிற 22 மாணவியர் விடுதிகள் எந்தெந்த இடங்களில் ஏற்படுத்தப்பட இருக்கின்றன? இதற்கு முன்னல் அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கிறபடி மாயூரம் தொகுதியில் மணல்மேட்டிலும் ஒன்று அமைக்கப்படவிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: விடுதிகள், எந்தெந்தப் பள்ளிகளில் எவ்வளவு மாணவியர் இருக்கிறர்கள், அவர்களில் எவ்வளவு பேர்கள் ஐந்து மைல்களுக்கு அப்பாலிருந்து வருகிறர்கள், அவர்களின் எண்ணிக்கை என்ன, ஒரு விடுதியைத் துவக்குகிற அளவிற்கு மாணவியர்கள் இருக்கிறர்களா, என்று இவைகளை எல்லாம் எண்ணிப் பார்த்து மாவட்ட நல அதிகாரி அவர்கள் அரசாங்கத்திற்கு செயற்குறிப்பு அனுப்பவேண்டும். மேற்சொன்னபடி எல்லாம் இருக்குமாளுல் நிச்சயமாக அந்த இடத்தில் ஒரு விடுதி துவங்கப்படும். அந்த வகையில் அரசாங்கத்திற்கு மாவட்ட நல அதிகாரிகளிடம் இருந்து வந்திருக்கிற செயற்குறிப்புகளை எல்லாம் அரசாங்கம் பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது. மணல்மேட்டில் அப்படிப்பட்ட சாத்தியக்கூறுகள் இருந்து அவசியம் என்று மாவட்ட நல அதிகாரி அரசாங்கத்திற்கு செயற்குறிப்பு அனுப்பியிருப்பார்களேயாளுல் நிச்சயமாக அதை இந்த வருடம் எடுத்துக் கொள்ள முடியும்.

கேளிக்கை வரி

* 418 வினு—திரு. கரு. சீமைச்சாமி: மாண்புமிகு உணவு, வாணிகவரித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சினிமா தியேட்டர்களில் கேளிக்கை வரி ஏய்ப்பு இருக்கிறதா என்று கண்டுபிடிக்க கூடுதலாக சிப்பந்திகளை நியமிக்க அரசு அனுமதி வழங்கியதா?

(இ) ஆம் என்றல், விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.